## 10

# ஒரு வாழ்வை ஆசீர்வதித்த மனிதன்

## (2 இராஜாக்கள் 5:1–19)

*எலிசா புதிய ஏற்பாட்டில் ஒரு முறை மட்டுமே குறிப்பிடப் பட்டிருக்கிறான். இயேசுவானவர் நாசரேத்து ஜெப ஆலயத்தில் பிரசங்கித்தபோது, "எலிசா தீர்க்கதரிசியின் காலத்திலே இஸ்ரவேலருக்குள்ளே அநேகம் குஷ்டரோகிகள் இருந்தார்கள்; ஆயினும் சீரியா தேசத்தானாகிய நாகமானேயல்லாமல், அவர்களில் வேறொருவனும் சுத்தமாக்கப்படவில்லை" என்றார் (லூக்கா 4:27). தங்களிடத்தில் தேவன் அக்கறையாயிருப்பதைப் போலவே புறஜாதியாரிடத்திலும் அக்கறையாயிருக்கிறாரென்பதை யூதர்கள் புரிந்து கொள்ள வேண்டுமென்று கிறிஸ்து விரும்பினார் ஆனால் அவர் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களுக்கோ இக்குறிப்பு மிகுந்த கோபத்தை உண்டாக்கிவிட்டது (வசனம் 28) நாகமான் குணமான சம்பவம் அவர்களுக்கு நன்றாகத் தெரிந்திருந்த போதிலும் அது பிடித்தமான பழைய ஏற்பாட்டு விவரிப்புகளில் ஒன்றாய் இருந்ததில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. நாகமான் அந்நிய தேசத்தான், தேவ ஜனத்தின் பகைவன், அவர்களைப் பொறுத்தவரையில் அவன் குஷ்டரோகியாகவே செத்திருக்க வேண்டும்!*

*நாகமானின் சம்பவம் இஸ்ரவேலருக்கு பிடிக்காமல் இருந்திருக்கலாம் ஆனால் இன்றைய பிரசங்கிமார்களிடையே பிரபலமிக்கதாயிருக்கிறது. எலிசாவின் வாழ்விலிருந்து ஒரு பிரசங்கியாருக்கு ஒரே ஒரு பிரசங்கமிருக்குமானால், அது அநேகமாக நாகமானைப் பற்றியதாகவே இருக்கும். பிரசங்கம் தயாரிப்போரில் பலர் நாகமானுக்கும் இன்றைய பாவிகளுக்குமிடையே ஒப்புமைகளைக் காண்கின்றனர். போதிக்கவும் மற்றும் பிரசங்கிக்கவும் ஏராளமானவை இச்சம்பவத்தில் பொதிந்திருப்பதால் ஒற்றைப் பாடத்தில் நிறுத்துவது என்பது நியாயமாயிராது. எனவே நாகமானின் சம்பவத்திற்கு பல பாடங்களை அளிக்கப் போகிறோம். இந்தப் பகுதி, வேத வசனக் குறிப்பின் ஒட்டுமொத்த சாராம்சமாயிருக்கும்; அடுத்து வருவது, சுவிசேஷ விஷயத்தில் அதனை சம்பந்தப்படுத்திக்காட்டும். மூன்றாவது பாடம் இந்த சந்தர்ப்பத்தின்போது எலிசாவின் வேலைக்காரனான கேயாசியின் செயல்பாடுகளையும், அதன் பின்விளைவுகளையும் பற்றியதாயிருக்கும்.*

*இச்சம்பவத்தை நாம் படிக்கையில், இதன் முக்கிய நோக்கத்தைப் புரிந்து கொள்ளுதல் நமக்கு உதவிகரமாயிருக்கும், ஏதோ எலிசாவின் அற்புதங்களில் ஒன்றைப் பதிவு செய்துவைப்பதற்கென்று இச்சம்பவம் பத்திரப்படுத்தப்படவில்லை. அதுவுமன்றி, குஷ்டரோகத்திற்கான தெய்வீக சுகம் பற்றி விவரிப்பதற்காக இது வேதாகமத்தில் சேர்க்கப்படவுமில்லை. மாறாக, யூதனல்லாத ஒருவன் விக்கிரக ஆராதனையை விட்டு ஜீவனுள்ள தேவன்*

*பேரிலுள்ள விசுவாசத்திற்கு எவ்விதமாக மாறினான் என்பதைப் பற்றிய ஓர் உள்ளத்தைத் தொடும் ஓர் விபரம் இது.*

## *நாகமானின் நிலை[1] (5:1-7)*

**ஓர் நோயாளி**

*2 இராஜாக்கள் 5 முக்கிய கதாபத்திரத்தை நமக்கு அறிமுகப்படுத்தும் வகையில் துவங்குகிறது: "சீரிய [ஆராம்] ராஜாவின் படைத்தலைவனாகிய நாகமான் என்பவன் தன் ஆண்டவனிடத்தில் பெரிய மனுஷனும் எண்ணிக்கையுள்ளவனுமாயிருந்தான். அவனைக் கொண்டு கர்த்தர் சீரியாவுக்கு (ஆராமிற்கு) இரட்சிப்பைக் கட்டளையிட்டார். மகா பராக்கிரமசாலியாகிய அவனோ ..." (வசனம் 1அ).*

*நாகமான் ஆராமின் குடிமகன் (ஒரு* அராமியன்*) என வசனம் 1 குறிப்பிடுகிறது, ஆனால் இயேசு அவனை, "*சீரியா *தேசத்தானாகிய நாகமான்" என அழைக்கிறார் (லூக்கா 4:27; என்னால் வலியுறுத்தப்படுகிறது). தமஸ்குவை தலைநகராகக் கொண்ட பாலஸ்தீனத்தின் வடக்கு மற்றும் வடகிழக்கு பிரதேசம் பழைய ஏற்பாட்டில் "ஆராம்" என குறிப்பிடப்பட்டிருந்து (2 இராஜாக்கள் 8:7 காண்க). புதிய ஏற்பாட்டுக் காலங்களில், இப்பகுதி "சீரியா" என அறியப்பட்டிருந்தது. (மத்தேயு 4:24; லுக்கா 2:2; நடபடிகள் 15:41; இந்நூலின் மற்றோரிடத்தில் உள்ள "எலிசாவின் நாட்களில் இஸ்ரவேல் மற்றும் சுற்றுப்புற தேசங்கள்" தேசப் படத்தைக் காண்க) இவ்வாறாக, சில மொழிபெயர்ப்புகள், பழையஏற்பாட்டில் "ஆராம்" என்பதற்கு பதிலாக "சீரியா" என்ற பதத்தை பயன்படுத்துகின்றன (2 இராஜாக்கள் 5:1ஐ காண்க;* KJV*).*

*எலியாவின் வாழ்க்கை பற்றிய நமது முந்தைய படிப்பில் ஆராம் தேசமானது முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. இஸ்ரவேலின் இராஜாவாக ஆகாப் ஆராமின் இராஜாவாகிய பெனாதாத்துடன் பல யுத்தங்களில் போரிட்டான் (1 இராஜாக்கள் 20:1-45; 22:1-44). அத்தகைய யுத்தங்களிலொன்றில், யாரோ ஒரு வில்வீரன் எய்த அம்பு அவனதுகவசத்தின் பலவீனமான பகுதியில் ஊடுருவியதால் ஆகாப் கொல்லப்பட்டான் (1 இராஜாக்கள் 22:34, 35) ஆயினும், எலிசாவின் வாழ்க்கையுடன் சம்பந்தப்பட்டு ஆராம் குறிப்பிடப்பட்டிருப்பது இதுவே முதல் தடவையாகும். எஞ்சியுள்ள படிப்புகளில் ஆராமின் விரோதங்கள் புலப்படும். (2 இராஜாக்கள் 6:8, 24; 8:7, 28 காண்க). எலிசாவின் வாழ்வின் முடிவில் அந்தப்போராட்டம் தொடர்ந்து கொண்டுதானிருந்தது (2 இராஜாக்கள் 13:17-20ஆ காண்க).*

*நாகமான் ஆராமின் "சேனைத்தலைவனாய்" இருந்தான்.* NIV *அவன் "படைத்தளபதி" என்று குறிப்பிடுகிறது. முந்தைய நாட்களில் இராணுவத்தை பெனாதாத் தலைமையேற்று நடத்தியிருந்தான் (1 இராஜாக்கள் 20:1, 26); ஆனால் படைக்கு தலைமையேற்று நடத்தும் பொறுப்பினை, "மகா பராக்கிரம சாலியாகிய" நாகமானிடம் அவன் ஒப்படைத்திருக்கக்கூடும். இராஜா நாகமானை "பெரிய மனுஷனாகவும்" "எண்ணிக்கையுள்ளவனாகவும்" கருதினான்.*

*"அவனைக் கொண்டு" - அதாவது, விக்கிரக ஆராதனைக்காரனாகிய தளபதி நாகமானைக் கொண்டு - "கர்த்தர் சீரியாவுக்கு இரட்சிப்பைக் கட்டளையிட்டார்" என்பதனை வாசிக்கையில் சிலர் வியப்படையலாம். தேசங்களின் விவகாரங்களில்*

தேவன் தலையிட்டு தமது நோக்கம் நிறைவேற அவிசுவாசிகளையும் கூட பயன்படுத்த முடியும் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள் (ஏசாயா 44:28; எசேக்கியேல் 30:24, 25; தானியேல் 4:25 பார்க்கவும்). எடுத்துக்காட்டாக, தேவஜனம் அவரைப் புறக்கணித்தபோது, சிலசமயங்களில் அஞ்ஞான தேசங்கள் அவர்களை நசுக்கும்படி அனுமதித்து அவர்களை தண்டித்துமிருக்கிறார் (2 இராஜாக்கள் 13:3 ஐக் காண்க). 2 இராஜாக்கள் 5:1ல் உள்ள "வெற்றி" (இரட்சிப்பு) ஆகாபையும் அவன் சேனையையும் ஆராம் தோற்கடித்ததைக் குறிப்பதாய் இருக்கலாம். ஏவப்படாத யூத பாரம்பரியத்தின்படி, ஆகாபைக் கொன்ற அம்பை எய்த வில்வீரன் நாகமான்தான்.[2]

நாகமானுக்கு ஓர் அசத்தும் அறிமுகப் பட்டியலுண்டு: அராமிய இராணுவத்தின் பிரதான படைத்தளபதி, பெரியவனும் மதிப்பிற்குரியவனுமாகிய மனிதன், பராக்கிரமசாலியான வெற்றி வீரன். அடுத்தாற்போல் இந்த முக்கியத்துவம் வாய்ந்த வார்த்தைகள் வருகின்றன: "அவனோ குஷ்டரோகியாயிருந்தான்" (வசனம் 1ஆ) .

வேதாகமத்தில் "குஷ்டரோகம்" என்பது பல்வேறு தரப்பட்ட உபாதைகளையும், நிலைமைகளையும் விவரிக்க பயன்படுத்தப்பட்ட பொதுவான வார்த்தையாகும். எப்போதுமே அது இன்று நாம் எதை குஷ்டம் [Hansen's disease] என்றழைக்கிறோமோ அதைக் குறிப்பிடுவதாயிராது. அவ்வாறிருப்பதனால், சில எழுத்தாளர்கள் நாகமானின் நிலவரத்தை மட்டுப்படுத்தி, அவனுக்கு வெறும் ஓர் கடும் தோல்வியாதி இருந்தது என குறிப்பிடுக்கின்றனர்.[3] நமது வசனப் பகுதியிலுள்ள பல விவரங்கள் அவன் ஓரளவிற்கு சாதாரணமான ஒரு மருத்துவ பிரச்சனையால் பாதிக்கப்பட்டவனல்ல என்றே சுட்டிக் காட்டுகின்றன. முதலாவதாக, குணம் பெறுவதற்காக நாகமான் மேற்கொள்ளத்தயாரான தீவிரமான பிரயத்தனங்கள், இரண்டாவதாக, இவ்வியாதிபற்றி இஸ்ரவேல் ராஜா கூறும் வார்த்தைகள், இது வாழ்வா சாவா என்ற நிலமையிலிருப்பதாகக் காட்டுகின்றன (வசனம் 7அ).

இறுதியாக, நாகமானின் குஷ்டம் வேறொரு மனிதனைப் பாதித்த போது அவன், "*உறைந்த மழை நிறமான குஷ்டரோகியாகி*" என்று சொல்லப்பட்டுள்ளது (வசனம் 27; என்னால் வலியுறுத்தப்படுகிறது). பழங்கால மற்றும் தற்கால எழுத்தாளர்கள் "வெள்ளைரக" குஷ்டத்தை, இந்நோயின் "அதி தீவிர வடிவம்"[4] என்றும், "மிகுந்த ஆபத்தான வாதை" என்றும் குறிப்பிடுகின்றனர்.[5] "வெண்குஷ்டம்" என்பது "அதில் பாதிக்கப்பட்டவர், நவீன மருத்துவ விஞ்ஞானம் தொழுநோய் என்று குறிப்பிடுவதைப் போன்றதான ... ஒருவித சுகவீனப்படுத்தும் மரண நிறமுடையவராயிருப்பார்" என விளக்கம் தரப்பட்டுள்ளது.[6] மோசேயின் சகோதரியாகிய மீரியாம் குஷ்டரோகத்தால் தாக்கப்பட்டபோது அவள் "உறைந்த மழையின் வெண்மை போன்ற குஷ்டரோகியானாள்" (எண்ணாகமம் 12:10). அவளது சகோதரனான ஆரோன் அவள் "செத்து விழுந்த பிள்ளையைப் போல" இருந்ததாக கூறினான் (வசனம் 12). நாகமான் இதேவிதமாய் இல்லாதிருப்பினும், இதுபோன்ற ஓர் அவஸ்தையில் தான் அவனிருந்தான். குணப்படுத்தமுடியாத கோரமான வியாதியில் அவன் அவதியுற்று வந்தான் - "மெதுவாக என்றபோதிலும், நிச்சயம் சாகடிக்கும் நோய்."[7]

நாகமான் குணமடைய ஆராமின் வசதிகள் அனைத்தையும்

நிச்சயம் பயன்படுத்தி முடித்திருப்பான், ஆயினும் பலனில்லை. அராமிய மருத்துவர்களால் ஒன்றும் செய்ய இயலவில்லை; அவனது அந்நிய "தேவர்கள்" சக்தியற்றவர்களாயிருந்தனர். அவன் நம்பிக்கையிழந்தவனாயிருந்திருப்பான் என்பதில் எவ்வித ஐயமில்லை.

**அனுதாபமுள்ள ஓர் சிறுபெண்**

அப்போது எதிர்பாராத இடத்திலிருந்து உதவிவந்தது. 2ம் வசனத்தில், "சீரியாவிலிருந்து தண்டுகள் புறப்பட்டு, இஸ்ரவேல் தேசத்திலிருந்து ஒரு சிறு பெண்ணைச் சிறைபிடித்துக் கொண்டு வந்திருந்தார்கள்; அவள் நாகமானின் மனைவிக்கு பணிவிடை செய்து கொண்டிருந்தாள்" என நாம் வாசிக்கிறோம். ஆராமுக்கும் இஸ்ரவேலுக்குமிடையே தொடர்ச்சியான எல்லைப்போர்கள் நடந்து வந்தது.(2 இராஜாக்கள் 6:8, 9ஐ காண்க).[8] ஆராமிலிருந்து போர்வீரர்கள் இஸ்ரவேலுக்குள் அடிக்கடி திடீர் தாக்குதல் நடத்துவதுண்டு (காண்க 6:23ஆ) அத்தகையதொரு தாக்குதலில் அவர்கள் ஒரு சிறு பெண்ணை சிறைபிடித்து வந்திருந்தனர், அவள் நாகமானின் வீட்டில் அடிமையாயிருந்தாள்.

ஒரு கணம் உங்களை இந்தவேலைக்காரப் பெண்ணிண் நிலையில் வைத்துப் பாருங்கள். உங்கள் பெற்றோரின் அன்பின் கரங்களிலிருந்து நீங்கள் பறிக்கப்பட்டு, அந்நிய நாட்டிற்கு கடத்தப்பட்டிருக்கிறீர்கள். பிள்ளைப்பருவத்து விளையாட்டுகளில் களித்திருப்பதற்கு பதிலாக அடிமையாய் வேலை செய்ய வற்புறுத்தப்படுகிறீர்கள். சந்தோஷமான வீட்டில் வாழ்வதற்கு பதிலாக உங்கள் இருப்பிடம் சோகம் நிறைந்ததொரு வீடாயிருக்கிறது. தெய்வ பயமுள்ள ஒரு குடும்பத்தின் அங்கமாயிருப்பதற்கு பதிலாக போலி தெய்வங்களை வணங்குகிறவர்கள் உங்களை சுற்றியிருக்கிறார்கள். இந்தப்பெண் கசப்புடனும் எரிச்சலுடனும் எளிதாய் வாழ்ந்திருக்கலாம், ஆனால் அவள் அப்படியில்லை எனத் தெரிகிறது. அவள் தனது துர்பாக்கிய நிலைக்காக (சிலர் செய்வது போல்) தேவனைக் குறை கூறியிருக்கலாம், ஆனால் அவள் தனது விசுவாசத்தைக் காத்துக் கொண்டாள். தனது துர்பாக்கிய நிலைக்கு காரணமான மனிதன் மெதுவான கொடிய மரணத்தில் சாகப் போகிறனே என்று அவள் களிகூர்ந்திருக்கலாம், ஆனால் அவள் அப்படிச்செய்யவில்லை. தன்னைப்பற்றி விசனப்படுவதற்கு பதி லாக அவதிப்படும் தன் எஜமானனுக்காக பரிதாபப்பட்டாள்.

ஒரு நாள் அவள் நாகமானின் மனைவிக்காக வேலைகளை மேற் கொண்டிருந்தாள் - ஒருவேளை எஜமானியின் கூந்தலை வாரிக்கொண்டிருந்தி ருக்கலாம் - அப்போது அவள் திருமதி நாகமானிடம், "என் ஆண்டவன் சமாரியாவிலிருக்கிற தீர்க்கதரிசியினிடத்தில் போவாரானால் நலமாயிருக்கும்! அவர் இவருடைய குஷ்டரோகத்தை நீக்கிவிடுவார்." எனக் கூறினாள் (வசனம் 3). இந்தப் பெண் எலிசாவைப் பற்றி அறிந்திருப்பதோடு மட்டுமல்லாமல், பழங்காலத்தில் காணப்பட்ட கொடிய வியாதிகளில் ஒன்றை அவன் குணமாக்கக்கூடும் என்ற விசுவாசத்தையும் கொண்டிருந்தாள் என்பது எனக்கு விசேஷித்ததாய் தோன்றுகிறது. எலிசாவின் பிரசித்தமிக்க விஷயங்களை அவளது பெற்றோர்கள் அவளிடம் சொல்லியிருக்கலாம். அவள் அந்நிய நாட்டிலிருந்திருக்கலாம். ஆனால் தான் யார் என்பதை மறந்துவிடவில்லை: தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட இனத்தின். வல்லமையுள்ள தீர்க்கதரிசியை ஆசீர்வாதமாக பெற்ற மக்களில் ஓர் அங்கம்! மேலும். இந்தச் சிறுபெண்

தன்னை சிறைபிடித்தவர்களோடு தனது விசுவாசத்தைப் பகிர்ந்து கொள்ள மனமுள்ளவளாயிருந்தது என் மனதைத் தொடுகிறது. இந்த வேலைக்காரியைப் பற்றி நாம் அறிந்தது கொஞ்சமே, அவளது பெயர்கூட தெரியவில்லை, ஆயினும் அவள் பழைய ஏற்பாட்டின் மிகவும் விசேஷித்த தனிநபர்களில் ஒருத்தியாய் இருக்கிறாள்.

ஏதோ எதேச்சையாய் தான் சொன்ன கருத்தின் விளைவைக் கண்டு அந்த சிறுமி பிரமித்துப் போயிருக்கக் கூடும். நாகமானின் மனைவி இவள் சொன்னதை தன் புருஷனிடம் சொல்லி, பின்னர் அந்த போர்வீரன் இராஜாவிடம் போய் சிறுமியின் வார்த்தைகளை அப்படியே ஒப்பித்ததாகத் தெரிகிறது (வசனம் 4). சற்றும் தாமதிக்காமல் இராஜா, நாகமான் அந்த அதிசயம் செய்யும் தீர்க்கதரிசியைக் கண்டுபிடிக்க ஏற்பாடுகளைச் செய்தான் (வசனம் 5அ). நாகமான் ஓர் அடிமைச் சிறுமியின் யோசனையை கவனித்துக் கேட்பது அவனது இக்கட்டான நிலமையைக் காட்டுகிறது. நாகமானின் இம்முயற்சியில் இராஜா அளித்த உற்சாகம் என்பது தனது தளபதியின்மேல் ஆட்சியாளனுக்குள்ள நன்மதிப்பையும் கருத்தினையையும் காட்டுகிறது.

அதிகாரவர்க்கத்து மனோபாவமுடைய இராஜா, "அதிகாரபூர்வமான வழிமுறையில் செல்வது" அவசியம் என நினைத்துக் கொண்டான். தனது அரசவை மந்திரவாதிகள் தனக்கு கட்டுப்பட்டிருப்பதைப் போலவே எலிசாவும் இஸ்ரவேல் இராஜாவினிடத்தில் கட்டுப்பட்டிருப்பதாக நினைத்தான். ஆகவே நாகமான் இஸ்ரவேல் இராஜாவினிடத்தில் போகச்சொல்லி அந்தப் பேரரசனுக்கு ஓர் கடிதமும் தயார் செய்தான் (வசனம் 5அ).

"பணத்தால் எதையும் வாங்கலாம்" என்ற உலகக்கருத்துடைய நாகமான், தீர்க்கதரிசியின் சேவைகளுக்கு தான் பணம் செலுத்தவேண்டியிருக்கும் என நினைத்துக் கொண்டான். அவ்வாறாக அவன் ஒரு சிறு செல்வத்தையும் சேகரித்து வைத்தான்: "பத்து தாலந்து வெள்ளியையும் ஆறாயிரம் சேக்கல் நிறைபொன்னையும், பத்து மாற்றுவஸ்திரங்களையும் எடுத்துக்கொண்டுபோனான்" (வசனம் 5இ). பத்து தாலந்து வெள்ளியென்பது 750 பவுண்டு (340 கிலோகிராம்) எடையும், ஆறாயிரம் சேக்கல் நிறைபொன்னானது 150 பவுண்டு (70 கிலோகிராம்).[9] எடையும் உள்ளது என மதிப்பிடப்படுகிறது. வெள்ளியின் விலைமதிப்பு 20,000 டாலர் மற்றும் பொன்னின் விலைமதிப்பு 60,000 டாலர் எனவும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.[10] பத்து மாற்று வஸ்திரங்களும்கூட மிகுந்த விலைமதிப்பள்ளவுள்ளவையாக இருந்திருக்கும் - விழாக்கள் மற்றும் இராஜாங்க நிகழ்ச்சிகளுக்குரிய விலையேறப்பெற்ற ஆடைகள்.

### பீதியடைந்த இராஜா

எல்லாம் தயாரானபோது நாகமான் கிளம்பினான் (வசனம் 5ஆ). அவன் தனது பரிவாரத்தோடு தெற்கு - தென்மேற்காக நூறுமைல்கள் அல்லது அதற்கும் கூடுதலாக பிரயாணம் பண்ணி இறுதியில் இஸ்ரவேலின் தலைநகரான சமாரியா பட்டணம் வந்தடைந்தான். 6ம் வசனப்படி "இஸ்ரவேலின் இராஜாவினிடத்தில் [ஆராம் இராஜா அனுப்பிய] அந்த நிருபத்தைக் கொடுத்தான்" (வசனம் 6அ). இஸ்ரவேலரும் அராபியரும் எப்போதும் சண்டையிடுகிறவர்களாயிருக்கையில், நாட்டிற்குள் நுழையும் போது ஏன் நாகமானும் அவனது கூட்டமும்

தாக்கப்படவோ கைது செய்யப்படவோ இல்லை? எப்போதாவது பகை ஓய்ந்திருந்த ஒரு சமயத்தில் இச்சம்பவம் நடைபெற்றிருக்கலாம் (6:23ஆ காண்க). ஒருவேளை நாகமான் இஸ்ரவேலுக்குள் வந்தபோது, ஒரு இடைக்கால போர்நிறுத்தத்திற்கான சைகைகாட்டி[11] அத்துடன் இராஜாவிடம் பேசுவதற்கு அனுமதியும் கேட்டிருக்கலாம். எப்படியோ, இராஜாவின் அரமனைக்குச் செல்ல அவன் அனுமதிக்கப்பட்டான்.

நாகமான் தனது வேலையாட்கள், இரதங்கள், குதிரைகள் மற்றும் பொக்கிஷங்களைச் சுமக்கும் கோவேறு கழுதைகள் ஆகியவற்றுடன் சமாரியா பட்டணத்திற்குள் நுழைவதை சற்று கற்பனை செய்து பாருங்கள் (காண்க 5:5ஆ, 9அ). அந்தப் பரிவாரம் ஓர் அணிவகுப்பைப் போலக் காட்சியளித்திருக்கும்! அதில் வரும் பிரதான உருவமாகிய மனிதனின் மாம்சமோ "வெண் குஷ்டத்தால்" உருக்குலைந்து கிடப்பதைக் கண்ட குடிமக்கள் திகைத்துப் போயிருப்பார்கள். குஷ்டரோகிகள் மற்ற ஜனங்களைவிட்டு தனியே வைக்கப்படவேண்டுமென மோசேயின் நியாயப்பிரமாணம் கட்டளையிட்டிருந்தது (லேவியராகமம் 13:45, 46 காண்க), ஆனால் இங்கேயோ அவர்களின் தெருக்களினூடே ஓர் குஷ்டரோகி பகிரங்கமாக பவனி வந்து கொண்டிருக்கிறான்!

நாகமான் அரண்மனைக்கு வந்து சேர்ந்தவுடன், தான் கொண்டுவந்த பொக்கிஷங்களைத் தன் வேலையாட்களைக் கொண்டு திறந்து காட்டியிருப்பான் பின்னர் தனது கடிதம் இராஜாவிடம் கொண்டு செல்லப்படுகையில் காத்திருந்தான்.

அப்போது இராஜாவின் அரியணை (மன்றத்திற்கு) அறைக்கு காட்சி மாறுகிறது. பெனாதாத்திடமிருந்து ஓர் சாதுர்யமிக்க தூதுக்குழு வந்து கொண்டிருப்பதை அறிந்த நேரமுதல் இராஜா கலக்கமடைந்திருந்தான் (1 இராஜாக்கள் 20:2, 3 உடன் ஒப்பிடுக) - பிரத்தியேகமாக, அந்தத் தூதுக்குழுவிற்கு தலைவாயிருந்தவனோ இஸ்ரவேலின் சேனைகளை ஒருமுறைக்கு மேல் தோற்கடித்தவன் என்பதால்தான். வெறுப்பிற்குரிய அராமியர்களுக்கு வேண்டியதுதான் என்ன? அப்போது ஆராமின் ராஜமுத்திரை பதித்த கடிதம் ஒன்றை அரசவைப் பணியாள் ஒருவன் அவனிடம் சமர்ப்பித்தான். வாசிக்கத் துவங்கினபோதே இராஜாவின் கைகள் நடுங்கியதா? ஒருவேளை அவன் அவசியமான அரசியல் சொல்வருணனைகளை மேலோட்டமாக பார்த்துவிட்டு செய்தியின் மையக் கருத்திற்கு வந்திருப்பான்: "இந்த நிருபத்தை என் ஊழியக் காரனாகிய நாகமான் கொண்டு வருவான்; நீர் அவன் குஷ்டரோகத்தை நீக்கிவிட அவனை உம்மிடத்தில் அனுப்பியிருக்கிறேன்" (2 இராஜாக்கள் 5:6ஆ).

"இஸ்ரவேலின் இராஜா அந்த நிருபத்தை வாசித்தபோது, அவன் தன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டு" (வசனம் 7அ; ஒத்துப் பார்க்கவும் 2 சாமுவேல் 13:19; 2 நாளாகமம் 34:27; எஸ்றா 9:3; எரேமியா 36:24). ரொம்பவும் குழம்பிப் போன மன்னன் இவன்! இந்த இஸ்ரவேல் இராஜா யாரென்று உறுதியாய் தெரியவில்லை, ஆயினும் அநேகமாக நாம் ஏற்கனவே சந்தித்த ஒருவனாகத்தானிருக்க வேண்டும்: யோராம். "ஒரு மனுஷன் அவன் குஷ்டரோகத்தினின்று நீக்கிவிடவேண்டும் என்று, அவன் (பெனாதாத்) என்னிடத்தில் நிருபம் அனுப்புகிறதற்கு, கொல்லவும் உயிர்ப்பிக்கவும் நான் தேவனா?" (2 இராஜாக்கள் 5:7ஆ) என்று அவன் உளறிக் கொட்டினான். அவன்

*மனதில் ஒரே ஒரு முடிவுக்குதான் வர முடிந்தது: "இவன் என்னை விரோதிக்க சமயம் தேடுகிறான் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்" (வசனம் 7இ; உடன் ஒப்பிடுக 1 இராஜாக்கள் 20:7). கவனத்திற்குரிய சுவாரஸ்யம் என்னவெனில், நாகமானின் குஷ்டரோக விஷயத்தில் ஒரு சிறு பெண் சட்டென்று எலிசாவை நினைத்தாள் ஆனால் ஒரு யூத இராஜா நினைக்கவில்லை.*

## *நாகமானின் சுத்தமாகுதல் (5:8-14)*

*மன்னனைக் கலவரப்படுத்தும் எதுவும் மக்களைக் கலவரப்படுத்தும். ஒரு புகழ்பெற்ற விருந்தினர் வந்திருக்கும் செய்தி பட்டண முழுவதும் பரவி விட்டது. இப்போதோ இராஜாவின் கொந்தளிப்பின் சேதி ஆளுக்கு ஆள் பரவி முடிவில் தீர்க்கதரிசியை வந்தெட்டியது. "இஸ்ரவேலின் இராஜா தன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்ட செய்தியை தேவனுடைய மனுஷனாகிய எலிசா கேட்டபோது, ... அவன்: நீர் உம்முடைய வஸ்திரங்களைக் கிழித்துக் கொள்வானேன்? ... என்று இராஜாவுக்கு சொல்லியனுப்பினான்" (2 இராஜாக்கள் 5:8அ). இராஜா இவ்விஷயத்தில் மனோபாதிப்படைய தேவையில்லை என்றும், ஆராமிடமிருந்து எவ்வித தாக்குதலும் நிகழாது என்றும் உறுதியாய் தெளிவுபடுத்தினான். மேலும் எலிசா, "அவன் (நாகமான்) என்னிடத்தில் வந்து, இஸ்ரவேலிலே தீர்க்கதரிசி உண்டென்பதை அறிந்து கொள்ளட்டும்" என்றான் (வசனம் 8ஆ). அவனது வார்த்தைகள் "இஸ்ரவேலிலே தீர்க்கதரிசி உண்டென்பதை நீயும்கூட முடிவில் புரிந்து கொள்வாய்" என்று குறிப்பால் உணர்த்தின!*

*அந்த கடிதத்திற்கு இராஜாவின் பிரதிபலிப்பு பற்றிய செய்தி நாகமானுக்கு எட்டியிருக்குமானால் அவன் பெருத்த ஏமாற்றமடைந்திருப்பான். இருப்பினும், தீர்க்கதரிசியின் வீட்டிற்கு வழிகாட்டுதல்கள் கொடுக்கப்பட்டதால் அவனது நம்பிக்கை மீண்டும் துளிர்த்தது. அன்றியும், சமாரியாவிலுள்ள ஒரு தீர்க்கதரிசி தான் தன்னை குணமாக்கக்கூடும் என அவனது மனைவியின் சிறுவயது வேலைக்காரி குறிப்பிட்டுச் சொல்லியிருந்தாள். நாகமானின் பட்டாளம் அரண்மனை வட்டாரங்களை விட்டு வெளியேறிய பின்னர்தான் இராஜா ஓர் நிம்மதி பெருமூச்சு விட்டிருப்பான்.*

*மீண்டும், நாகமானின் பரிவாரம் தெருக்களின் வழியாய் ஊர்வலமாகச் சென்று இறுதியில் எலிசாவின் எளிய வசிப்பிடம் சேரும்வரை சமாரிய மக்கள் விறைத்துப் பார்த்துக் கொண்டிருப்பதை நான் பார்க்கிறேன். "அப்படியே நாகமான் தன் குதிரைகளோடும் தன் இரதத்தோடும் வந்து எலிசாவின் வாசற்படியிலே நின்றான் (அதாவது, நின்று விட்டான்)" (வசனம் 9). தீர்க்கதரிசி தன் வீட்டிலிருந்து வெளிவரும்போது அவனது பாதங்களில் படைக்கும்படிக்கு தயாராக இருக்கும்படி தனது பணியாட்களை பொக்கிஷங்களுடன் நிறுத்தியிருந்தான்.*

### *தெய்வீக நிவாரணம்*

*இருப்பினும் எலிசா காட்சியளிக்கவில்லை. அதற்கு பதிலாக, ஒரு வேலைக்காரனை அது கேயாசியாக இருக்கலாம் (வசனம் 20 காண்க), ஒரு செய்தியுடன் அனுப்பினான் (வசனம் 10). சில எழுத்தாளர்கள் தீர்க்கதரிசியின் மரியாதையின்மையப் பற்றி வியப்படைகின்றனர், ஆயினும், இத்தொடர்*

சம்பவங்களின் நோக்கத்தை நினைவில் கொள்ள வேண்டும்.தேவன் நாகமானின் ஆத்துமாவை விட அவனது சரீரத்தின்மேல் அக்கறை கொண்டவரல்ல. மெய்யான தேவனென்று அவன் ஏற்றுக் கொள்ள முதலில் அவனுடைய இருதயம் ஆயத்தப்படுத்தப்படவேண்டும் அதற்கு தளபதி கற்றுக் கொள்ளவேண்டிய முதல் விஷயம் கீழ்ப்படிதல் ஆகும் (லூக்கா 14:11), அவன் மாம்சம் சிறுபிள்ளையின் மாம்சத்தைப் போல் மாறுபதற்கு முன்பே (2 இராஜாக்கள் 5:14), அவனது இருதயம் ஒரு சிறுபிள்ளையின் இருதயத்தைப் போலாக வேண்டும் (மத்தேயு 18:3, 4).

கேயாசி கொண்டுவந்த செய்தி இதுதான்: "நீ போய், யோர்தானில் ஏழுதரம் ஸ்நானம்பண்ணு; அப்பொழுது உன் மாம்சம் மாறி, நீ சுத்தமாவாய்" (2 இராஜாக்கள் 5:10ஆ). " 'ஸ்நானம்பண்ணு' என்பதற்கான வார்த்தை இங்கே 'முழுகு' " என்பதாகும்.[12] வசனம் 14 அவன், "முழுகினபோது" என்கிறது; (CJB அவன் "தன்னை முழுக்கினான்" என்று கூறுகிறது.) நாகமான் ஏறத்தாழ 20 மைல்கள் பிராணம் செய்து யோர்தான் நதிக்கு வந்து அதில் ஏழு தரம் முழுகினால் அதன் விளைவுகளுக்கு தேவன் அளித்த உறுதி: உன் மாம்சம் மாறி நீ சுத்தமாவாய்" (என்னால் வலியுறுத்தப்படுகிறது).

ஏன் ஏழு முழுகுதல்கள் தேவைப்பட்டது? வேத வாக்கியங்களில் அடிக்கடி காணப்படுகிற ஏழு என்ற எண் (ஆதியாகமம் 2:2; யோசுவா 6:4 காண்க) பெரும்பாலும் பூரணம் அல்லது முழுமை என்ற பொருள் பொதிந்ததாயிருக்கிறது. எதுவும் நடைபெறாததாய் தோன்றிய போதிலும் திரும்பத் திரும்ப முழுகுகின்ற விசுவாசத்திற்காகத் தான் இச்சம்பவத்தில் பல முழுகுதல்கள் கட்டளையிடப்பட்டிருக்கலாம்.

### ஆரம்ப பிரதிபலிப்பு

அறிவுறுத்தல்களுக்கு நாகமான் எவ்வாறு பதில்செய்தான்? அவன் "கடுங்கோபங்கொண்டு" (வசனம் 11அ)! தீர்க்கதரிசியின் நடத்தையால் அவன் அவமானமடைந்தான். படைத்தலைவனாகிய அவன் ஒரு முக்கியஸ்தன்; இவ்விதமாய் நடத்தப்படுவது அவனுக்கு பழக்கப்பட்டதல்ல! மேலும் தீர்க்கதரிசியின் அறிவுறுத்தல்களால் அவன் அவமதிக்கப்பட்டான்,

> "அவன் வெளியே வந்து நின்று, தன் தேவனாகிய கருத்தருடைய[13] நாமத்தைத் தொழுது, தன் கையினால் அந்த இடத்தைத் தடவி, இவ்விதமாய்
>
> குஷ்டரோகத்தை நீக்கி விடுவான் என்று எனக்குள் நினைத்திருந்தேன். நான் ஸ்நானம் பண்ணி சுத்தமாகிறதற்கு இஸ்ரவேலின் தண்ணீர்கள் எல்லாவாற்றைப்பார்க்கிலும் தமஸ்குவின் நதிகளாகிய ஆப்னாவும் பர்பாரும் நல்லதல்லவோ" என்று அவன் கூறினான் (வசனங்கள் 11ஆ, 12அ).

"தமஸ்குவின் தெளிந்த நதிகள், பனிபடர்ந்த ஏமானுஸ் மலைகளிலிருந்து ... அல்லது எர்மோன் பர்வதத்திலிருந்து பாய்ந்தோடின."[14] சுத்தமடைவதற்காக கழுவவேண்டுமென்றால், "சேறும் கொந்தளிப்புமான"[15] யோர்தானைக் காட்டிலும் நிச்சயமாக அந்த நதிகள் பொருத்தமானவைகளாகத் தெரிந்தது.

நாகமான் கோபமுற்றவனாக, கிளம்பிச் செல்வதற்கான உத்தரவுகளைப்

பிறப்பித்தான். தனது இரதத்தை சட்டென்று சுழற்றித் திருப்பி "உக்கிரத்தோடே திரும்பிப்போனான்'' (வசனம் 12ஆ). அந்தப் பரிவாரம் கிளம்புகையில் எலிசா வெளியில் பாய்ந்து சென்று அவனைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. நாகமானுக்கு அவன் ஒரு பரிகாரத்தை அளித்தான், ஆனால் அதனை அவன் ஏற்றுக்கொள்ள அவனை நிர்பந்திக்கவில்லை. அந்த சிப்பாய் தன் வாழ்நாளின் எஞ்சியுள்ள காலமெல்லாம் ஓர் குஷ்டரோகியாகவே வாழும் நிலைக்கு நெருங்கிவிட்டான்!

நல்லவேளையாக, அவனோடிருந்த மற்றவர்கள் மிகவும் தெளிவாக சிந்திக்கிறவர்களாயிருந்தனர். ஒரு வேலையாள் தளபதியை தீர்க்கதரிசியிடம் திசைதிருப்பிவிட்டாள்; இப்போது மற்ற பணியாட்களும் தீர்க்கதசி சொன்னவைகளுக்கு கீழ்ப்படியும்படி அவனை சம்மதிக்கப் பண்ணினார்கள். பெயர் குறிப்பிடப்படாத இந்த வீரர்கள் நாகமானை சிந்திக்க வைத்தனர்: "தகப்பனே அந்த தீர்க்கதரிசி ஒரு பெரிய காரியத்தைச் செய்ய உமக்கு சொல்லியிருந்தால் அதை நீர் செய்வீர் அல்லவா?" (வசனம் 13அ). அதாவது அவர்கள் தங்கள் எஜமானைப் பார்த்து, "எக்கச்சக்கமான (கட்டுக்கடங்காத) (மிதமிஞ்சிய) பொருட் செலவுள்ள அல்லது மிகவும் கடினமான (சிக்கலான) அல்லது ஒருவேளை சாதனைக்குரிய ஆபத்தான ஒரு காரியத்தை செய்யும்படி அந்த தீர்க்கதரிசி சொல்லியிருப்பாரானால் என்ன செய்திருப்பீர்? இந்தக் கொடிய வியாதியிலிருந்து நீர் *எதையும்* செய்யத் துணிந்திருப்பீர் அல்லவா?" என்று கேட்டனர். நாகமான் ஒருவேளை வேண்டாவெறுப்பாகத் தன் தலையை ஆட்டியிருப்பான்.

தொடர்ந்து அந்த வேலைக்காரர், "ஸ்நானம் பண்ணும் அப்பொழுது சுத்தமாவீர் என்று அவர் உம்மோடே சொல்லும்போது, அதைச் செய்ய வேண்டியது எத்தனை அதிகம்?" என்று கேட்டார்கள் (வசனம் 13ஆ). வேறு விதமாய் சொல்வதாயிருந்தால், "பொருட்செலவுமிக்க காரியத்தைச் செய்யச் சொல்வதைவிட வேறு செலவின்றி இதற்கு நேரம் செலவழித்தால் போதுமே. சிரமமான ஒன்றை மேற்கொள்வதைவிட இந்தக் குறிப்புகள் தெளிவாகவும், எளிமையாகவும், கடைபிடிக்க எளிதாகவும் இருக்கின்றனவே. ஆபத்தான ஒரு விஷயத்தைச் செய்யச் சொல்லி நீர் சிக்கலில் மாட்டிக்கொள்வதற்கு பதில் இங்கே சம்பவிக்க வாய்ப்புள்ள அபாயங்கள் கேலியும் கடைசியில் ஏமாற்றம் மட்டும் தானே. இவ்விடம் வந்து சேருவதற்கு நீர் நெடுந்தூரமும், கடினமுமான ஓர் புனித யாத்திரை மேற்கொண்டாயிற்று. அந்த இருபது மைல் தூரம் பயணித்து தீர்க்கதரிசி சொல்வதை செய்தால் என்ன? நீர் இழக்கப்போவது என்ன - உமது பெருமையை மட்டும்தானே?"

### இறுதி முடிவு

பணியாட்களின் விவேகம் ஜெயித்தது. நாகமானும் அவனது குழுவும் வடக்கே தமஸ்குவிற்கு கிளம்புவதற்கு பதிலாக சமாரியாவின் மலைப்பிரதேசங்களை விட்டு செங்குத்தாய் இறங்குகிற பள்ளத்தாக்குகளின் வழியாக ஆயிரம் அடி "தாழ்விற்கு இறங்கி" (வசனம் 14அ) ஆழமான யோர்தான் பள்ளத்தாக்கிற்கு வந்தனர். அந்த நிலப்பிரதேசத்தின் சூழ்நிலைகளுக்கு ஏற்ப அல்லது உட்பட்டு நாகமான் எவ்வளவு வேகமாக விரட்டியிருந்தாலும் அப்பயணத்திற்கு ஓரிரு நாட்களாவது பிடித்திருக்கும்.

*மீண்டும் நாகமானும் அவனது கூட்டமும் இறுதியாக யோர்தானின் கரைகளில் வந்து நிற்கும் காட்சியை உங்கள் மனதில் சித்தரித்துப் பாருங்கள். நாகமான் தனது இராணுவ சீருடையைக் களைந்து, கலங்கிய தண்ணீருக்குள் உந்திநடப்பதைக் காணுங்கள். அவமானத்தால் அவன் முகம் சிவந்திருக்கும் அல்லவா? ஆற்றங்கரைகளில் கூட்டங்கூடும் அற்பர்களுக்கிடையே ஆங்காங்கே எழும் கேலிச்சரிப்பு அவனுக்கு கேட்டதா? இருந்தபோதிலும் தனது தலையும் தோள்களும் மட்டும் தெரியும்வரை அவன் உந்தி நடந்தான். பிறகு தன் கண்களை மூடி, மூச்சைப் பிடித்துக்கொண்டு, தண்ணீருக்குள் மூழ்கினான். தண்ணீர் முகத்தில் வழிந்தோட அவன் மேலெழும்பி மூச்சுவிட்டான். அவன் தனது தலைமயிர்த் தண்ணீரை உதறி, கண்களைத் தேய்த்துவிட்டு மீண்டும் தன்னை தண்ணீருக்குள் மூழ்கினான். இரண்டுமுறை, மூன்றுமுறை, நான்கு, ஐந்து, ஆறு - திரும்பத் திரும்ப அவன் தண்ணீருக்கடியில் மறைந்து போனான்.*

*கடைசியாக அவன் ஏழாவது முறை அடியில் சென்றான். இம்முறை அவன் மறுபடியும் தோன்றியபோது ஒரு ஆச்சரியமான காரியம் நிகழ்ந்திருந்தது! அந்த வசனப்பகுதி, "தேவனுடைய மனுஷன் வார்த்தையின்படியே யோர்தானில் ஏழுதரம் முழுகினபோது, அவன் மாம்சம் ஒரு சிறுபிள்ளையின் மாம்சத்தைப் போல மாறி, அவன் சுத்தமானான்" என்று கூறுகிறது (வசனம் 14ஆ). குஷ்டரோகம் மட்டுமல்ல, காலத்தின் சிதைவுகளும்கூட மறைந்துபோனது! அவனது தோல், முப்பது அல்லது நாற்பது வயதுடைய ஒரு மனிதனுடைய மாம்சம் போல் இல்லாமல், "ஒரு சிறு பிள்ளையின் மாம்சத்தைப் போல இருந்தது"!*

## *நாகமானின் மாற்றம் (5:15-19அ)*

*நாகமானின் உடல் பிரமிப்பூட்டும்வகையில் மாறியிருந்தது - ஆனால் புதுப்பிக்கப்பட்ட தன் மாம்சத்தை அவன் ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருக்கையில் இதை விட விசேஷித்த ஓர் மாற்றம் அவன் மனதிலும் இருதயத்திலும் ஏற்பட்டது. ஆராமின் "தேவர்களின்" பூசாரிகளும்கூட செய்ய இயலாததை இந்த யெகோவாவின் தீர்க்கதரிசி செய்துவிட்டார். நாகமான் சாத்தியமான ஒரே முடிவுக்கு வந்தான்: ஆகையால் எலிசா மெய்யான ஒரே தேவனாகிய யெகோவாவின் ஓர் மெய்யான தீர்க்கதரிசியாகத்தான் இருக்க வேண்டும்!*

*நிலமையை மனக்கண்முன் கொண்டுவர முயலுங்கள். வெகுவாய் உள்ளம் நெகிழ்ந்த இம்மனிதன் தன் நாட்டை நெருங்குகையில், தரைமட்டும் குனிந்து பணிவாய் வணங்கி, தன் நன்றிக் கண்ணீரை தேவனுக்கு சமர்ப்பித்து மௌனமாய் தரையில் வீழ்ந்ததை கற்பனை செய்து பாருங்கள். "தேவனே நீர் எப்படிப்பட்டவர்!" என்பதுவே அவன் ஆத்துமாவின் பேச்சாயிருந்திருக்கும் (மொழியாய் இருந்திருக்கும்). பின்னர் நாகமான் புழுதியிலிருந்து எழுந்து, உடையை மாற்றிக்கொண்டு, இளமைத் துடிப்புடன் தன் இரதத்திற்குள் தாவி, சமாரியாவிற்கு திரும்பிச் செல்லக் கட்டளையிட்டான். "மீண்டும் சமாரியாவிற்கே" என்பது வரிசையிலுள்ளோருக்கு கடத்தப்பட்டு, படை கிளம்பியது. அது ஓர் வெற்றி பவனியாயிருந்தது - நாகமானுடையதல்ல, தேவனுடையது!*[16]

**அபூர்வமான அறிக்கை**

யோர்தானில் இருக்கும்போதே நாகமான் ஆராமுக்கு திரும்பிச் செல்லும் பாதையில் கால் தூரத்திலிருந்தான்; எனினும் உடனடியாக தமஸ்குவிற்கு திரும்பிப்போய் அவனது நற்சேதியை பகிர்ந்துகொள்வதற்காகவும், தான் புதிதாய்க் கண்டுகொண்ட விசுவாசத்தை வெளிப்படுத்துவதற்கு பதிலாக, தனது பாராட்டைத் தெரிவிப்பதற்காகவும், தன் நடைகளை வந்தவழியே திரும்பினான். "அவன் தன் கூட்டத்தோடெல்லாம் தேவனுடைய மனுஷனிடத்திற்கு திரும்பி" (வசனம் 15அ).

இம்முறை அவனை சந்திப்பதற்கு எலிசா வெளியே வந்தான், "நாகமான் வந்து அவனுக்கு முன்பாக நின்று" (வசனம் 15ஆ) "இதோ இஸ்ரவேலில் இருக்கிற தேவனைத்தவிர பூமியெங்கும் வேறே தேவன் இல்லை என்பதை அறிந்தேன்" என்று சொல்லும்போது அந்த இராணுவ வீரனின் குரல் உணர்ச்சிப் பெருக்கால் நிரம்பியதாய் இருந்திருக்கும் (வசனம் 15இ). அவனது வாக்குமூலம் வியப்பிற்குரியதாயிருக்கிறது; அவன் யெகோவாவை இஸ்ரவேலின் தேவனாக மாத்திரமல்ல "பூமியெங்கும்" இருக்கும் ஒரே தேவனாக கண்டுகொண்டான்! அறிவு (அறிவொளியூட்டப்படா) பெருக்கமில்லா காலகட்டத்திலும் அவன் கர்த்தரின் (அகில அளவிலான உலகளாவிய) பிரபஞ்ச அளவிலான தன்மையைப் புரிந்து கொண்டான்! அவனது வார்த்தைகள் "பாகாலும் [யெகோவாவும்] ஆகிய இருவரும் தேவர்களா அல்லது [யெகோவா] மட்டும்தான் தேவனா என்ற தங்கள் கருத்தில் எப்போதுமே தடுமாற்றத்திலிருந்த இஸ்ரவேலரை அவமானப்படுத்தியது."[17]

தனது பாராட்டை வெளிப்படுத்தும் வண்ணமாக நாகமான் தான் கொண்டு வந்திருந்த பொன், வெள்ளி, வஸ்திரங்களை எலிசாவுக்கு அளிக்க முற்பட்டான்: "இப்போதும் உமது அடியேன் கையில் ஒரு காணிக்கை வாங்கிக் கொள்ள வேண்டும்" (வசனம் 15ஈ). இருப்பினும் தீர்க்கதரிசி மறுத்துவிட்டார்: "நான் வாங்குகிறதில்லை என்று கர்த்தருக்கு முன்பாக அவருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன்" (வசனம் 16அ). அந்த போர் வீரன் வற்புறுத்திய போதிலும் பரிசுப்பொருட்களை நிராகரிப்பதில் அவன் உறுதியாயிருந்தான் (வசனம் 16ஆ).

சில சூழ்நிலைகளில் எலிசா பரிசுப்பொருட்களைப் பெறுவதற்கு எதிரானவராக இருந்ததில்லை (4:8-11, 42 காண்க), ஆனால் நாகமானிடமிருந்து எதையும் ஏற்றுக்கொள்வது உகந்ததல்ல என அவன் எண்ணினான். ஒருவேளை ஆராமிய போலித்தீர்க்கதரிசிகளைப் போன்று தான் கூலிக்காக வேலைசெய்பவனல்ல என்பதை அந்த போர்வீரன் புரிந்துகொள்ளவேண்டுமென்று அவன் விரும்பியிருக்கலாம். ஒருக்கால், இந்த குணமாகுதலுக்கு தேவன் அல்ல, தான்தான் காரணம் என்ற அபிப்பிராயத்தை அவன் விட்டுவைக்க விரும்பவில்லை எனலாம்.

**வழக்கத்திற்கு மாறான வேண்டுதல்கள்**

நாகமான் விடுத்த வேண்டுகோள்களோடு இச்சம்பவத்தின் இந்தப்பகுதி நிறைவடைகின்றது. முதலாவதாக அவன் எலிசாவிடம் "இரண்டு கோவேறு கழுதைகள் சுமக்கத் தக்க இரண்டு பொதி மண் உமது அடியேனுக்கு கட்டளையிட வேண்டும்; உமது அடியேன் இனி கர்த்தருக்கே அல்லாமல், அந்நிய தேவர்களுக்கு

*சர்வாங்க தகனத்தையும் பலியையும் செலுத்துவதில்லை" எனக் கேட்டான் (வசனம் 17). நாகமான் ஒரு பலிபீடத்திற்கான கட்டுமானப்பொருளாக அந்த மண்ணைக் கேட்டிருக்கக் கூடும் (யாத்திராகமம் 20:24 உடன் ஒப்பிடுக), அல்லது யெகோவாவிற்கு பலிசெலுத்துவதற்கான பலிபீடத்தின் ஆதாரப் பொருளாக (அடிப்பாகமாக) அதனை கேட்டிருக்கக் கூடும். வழக்கத்திற்கு மாறான இந்த வேண்டுகோளுக்கு வழக்கமாக அளிக்கப்படும் விளக்கம். "யெகோவா ஒரு பிராந்தியத்திற்குரிய தேவன் என்றும் அதனால் அவருக்கு இஸ்ரவேலிய மண்மீதுதான் பலிகளை செலுத்தவேண்டும்" எனவும் அந்த போர்வீரன் நினைத்தான் என்பதுவே - ஆனால் யெகோவா அகிலத்துக்கும் தேவன் என்ற அவனது அங்கீகரிப்பிற்கு இது முரண்பட்டுப்போகும் (வசனம் 15). மெய்யான தேவனோடு சம்பந்தப்பட்டிருப்பதால் ஒருவகையில் இஸ்ரவேலில் உள்ள மண் "விசேஷித்தது" என நாகமான் நினைத்தான் என்பது குறைந்தபட்சமாவது தெளிவாகத் தெரிகிறது (யாத்திராகமம் 3:5 உடன் ஒப்பிடுக) - அதில் கொஞ்சம் ஊருக்கு கொண்டுசெல்ல விரும்பினான். ஒவ்வொருவருடமும் "புனித பூமி"யிலிருந்து சுற்றுலா பயணிகள் ஊருக்கு கொண்டுவரும் நினைவுப் பொருட்களுடன் இதனை ஒப்பிடலாம்.*

*நாகமானை உறுத்திக் கொண்டிருந்த வேறொன்றும் அவன் உள்ளத்திலிருந்தது. தனது புதிய விசுவாசத்திற்கும், உத்தியோகக் கடமைகளுக்குமிடையே போராட்டம் (மோதல்) இருக்குமென்பது எலிசாவை மீண்டும் காணச் செல்லுகையில் அவன் மனதில் பட்டது, பண்டைய உலகில், ஒரு ஜனத்தின் அரசாங்கத்திற்கு அந்த ஜனத்தின் "தெய்வம்" அல்லது "தெய்வங்களுக்கும்" இடையே ஓர் நெருக்கமான தொடர்பு இருந்தது. இவன் தனது உத்தியோக சம்பந்தமான பங்கை நிறைவேற்றுவதை அது இராஜாவுடன் புறமத கோயில்களுக்குள் அவன் செல்வதையும் யெகோவா கண்டித்திடுவாரா? அவன் எலிசாவிடம் இவ்வாறாக கூறினான், "ஒரு காரியத்தையே கர்த்தர் உமது அடியேனுக்கு மன்னிப்பாராக; என் ஆண்டவன் பணிந்துகொள்ள ரிம்மோன் கோவிலுக்குள் பிரவேசிக்கும்போது, நான் அவருக்கு கைலாகு கொடுத்து[18] ரிம்மோன் கோவிலிலே பணியவேண்டியதாகும்; இப்படி ரிம்மோன் கோவிலில் நான் பணிய வேண்டிய இந்தக் காரியத்தைக் கர்த்தர் உமது அடியேனுக்கு மன்னிப்பாராக" (வசனம் 18). ரிம்மோன் என்பது பாகாலுக்கு இணையான (நிகரான) ஆராமைச் சேர்ந்த - பிரதான ஒன்றாயில்லாதபட்சத்தில் ஆராமின் முக்கிய தெய்வங்களில் ஒன்றாயிருந்தது.*

*தான் புதிதாய் கண்டுகொண்ட விசுவாசத்திற்கு ஏற்புடைய ஓர் வாழ்க்கை வாழ்வதில் உள்ள சவாலை புரிந்து கொண்டதற்காக - அதுவும் எதிர்கொள்ளவிருக்கும் பிரச்சனைகளைப்பற்றிய கரிசனையுள்ளவனாயிருப்பதற்காக நாகமானை நான் மெச்சிக்கொள்ளத் தான் வேண்டும். இன்று கர்த்தரிடம் வருகின்ற சிலர் தாங்கள் வாழப்போகும் புதிய வாழ்வினைப் பற்றியும் அது தங்கள் முந்தைய வாழ்க்கை முறைமைகளுடன் எவ்விதம் முட்டிக்கொள்ளும் என்பதைப்பற்றியும் சொற்ப அறிவுள்ளவர்களாயிருக்கிறார்கள் (ரோமர் 6:3, 4).*

*என்றாலும், 18ம் வசனத்திலுள்ள நாகமானின் வார்த்தைகளைக் குறித்து நான் சத்தமிட்டுச் சொல்ல விரும்புவதென்னவெனில், "நீ உத்தேசிப்பதில் உள்ள அபாயங்களை நீ உணருவதில்லையா? ரிம்மோனை தெய்வம் என்று நீ நம்பாமலும் அவனுக்கு பலிகளை செலுத்தாலும் இருந்தாலும் [வசனம் 15ஐ*

*பார்க்கவும்], அவன் கோவிலுக்குள் நீ சென்று பணிவாயானால், நீயும் அவனை வணங்குவதாகத்தான் காணப்படுவாய், அவ்வாறாக, பிறர்மீது உனக்குள்ள நேர்மறை செல்வாக்கை நீ பயனற்றதாக்கி விடுவாய். மேலும் ரிம்மோன் வணக்கத்தோடு உள்ள நீடித்த தொடர்பு உன்னை மீண்டும் விக்கிரக ஆராதனைக்குள் இழுத்துப் போட்டு விடும். நெஞ்சார, உன்னை கெஞ்சிக் கேட்கிறேன், விக்கிரக ஆராதனை சம்பந்தப்பட்ட எதிலிருந்தும் எல்லாவற்றிலிருந்தும் நீ விலகியிரு!"*

அப்படித்தான் நான் பதிலளித்திருப்பேன், ஆனால் எலிசாவோ எளிமையாக, "சமாதானத்தோடே போ" என்றான் (வசனம் 19அ). இதை வைத்துக் கொண்டு சிலர், ரிம்மோன் கோவிலுக்கு செல்வதற்கு நாகமானுக்கு தீர்க்கதரிசி அங்கீகாரம் அளித்தார் என கருதுகின்றனர், தவறோடு ஒத்துப்போதலை நியாயப்படுத்துவதற்காகவும் சிலர் இதனை பயன்படுத்துகின்றனர். ஆயினும், எலிசாவின் கூற்று அங்கீகாரத்தையோ அல்லது ஆட்சேபனையையோ வெளிப்படுத்துவதில்லை.[19] அது வெறும் ஒரு "பிரியாவிடைச் சொல்" ஆகும்.[20]

நாகமான் ரிம்மோன் கோவிலிக்குள் போவதை நிறுத்திவிடுமாறு எலிசா ஏன் வலியுறுத்தவில்லை என்ற கேள்வியை இது இன்னமும் விட்டு வைத்திருக்கிறது. இதோ அவரது மௌனத்திற்கு காரணமான சாத்தியக்கூறுகளில் சில:

- அக்கணத்தில் எலிசா, நாகமானின் பிரமிப்பூட்டும் ஆவிக்குரிய முன்னேற்றத்தைக் கண்டு மெய்சிலிர்த்துப் போனான். ஆண்டவருக்கு அது ஒரு மாபெரும் வெற்றியாயிருந்தது!
- நாகமான் இன்னும் விசுவாசத்திற்கு புதியவனாகத்தான் இருக்கிறான் என்று எலிசா உணர்ந்திருந்தபடியால் தற்போது அவனால் சுமக்க முடிந்ததைவிட அதிக கனமான ஆவிக்குரிய பாரத்தை அந்த போர்வீரன்மேல் சுமத்த விரும்பவில்லை.
- ஏற்கனவே தனது செயல்பாடுகளில் உள்ள போராட்டத்தைப் பற்றிய போதுமான நுண்ணறிவு நாகமானுக்கு இருந்தபடியால் அவன் தொடர்ந்து ஆவிக்குரிய வகையில் வளர்ச்சியடைந்து பின்னர் தானாகவே ஒரு சரியான தீர்மானத்திற்கு வந்திடுவான் என்று எலிசா நம்பினான்.

அநேகமாக மேற்சொன்ன காரணங்களால்- இன்னும் பிற காரணங்களால் எலிசா அச்சூழ்நிலையை அவ்விதம் கையாண்டான். இன்றும் கூட ஒரு நபர் முடிவாய் அறிந்துகொள்ள வேண்டிய *அனைத்தையும்* அவரை ஞானஸ்நானப்படுத்துவதற்கு முன்னரே போதித்துவிட நாம் முற்படுவதில்லை. சில உபதேசம் - *அதிகப்படியான* உபதேசித்தல் - ஞானஸ்நானத்திற்கு பின்பு நடைபெறவேண்டியதாயிருக்கிறது (மத்தேயு 28:19, 20).

## முடிவுரை (5:19ஆ)

"சமாதானத்தோடே போ" என்று எலிசா கூறிய பின்பு ஆராமுக்கு திரும்பிச் செல்ல நாகமான், "புறப்பட்டான்" (2 இராஜாக்கள் 5:19ஆ). இந்தப் பாடத்தை நாம் முடிக்கையில், அவன் தமஸ்குவிற்கு திரும்பி வந்து சேர்ந்ததை நாம் நினைத்துப் பார்க்க விரும்புகிறேன். சமாரியாவிலுள்ள தீர்க்கதரிசியிடத்தில் அவனை போகச் சொன்ன அந்த யூத சிறுபெண்ணின் கண்ணோட்டத்தில் இந்த தொடர் சம்பவங்களை கற்பனை செய்து பாருங்கள்.

*தனது ஆலோசனை உருவாக்கி விட்ட பரபரப்பைக் கண்டு அவள் திகைத்துப் போனாள். நாகமானும் அவனது கூட்டமும் பட்டணத்தை விட்டுக் கிளம்புகையில் தன் எஜமானியுடன் நின்று அவள் பார்த்துக் கொண்டிருந்தாள். நோயால் சிதைந்துபோயிருந்தாலும் தளபதியின் முகத்தில் ஓர் உறுதி காணப்பட்டது. நாட்கள் கடந்தபோது, என்ன சம்பவித்ததோ என அறிய அவள் ஆவலாயிருந்து, அநேக ஊக்கமான ஜெபங்களை ஏறெடுத்து வந்தாள். ஒருநாள் தளபதி நாகமான் வந்துவிட்டார் என்ற ஒரு ஆரவார சத்தத்தை அவள் கேட்டாள், வாசலை நோக்கி அவள் விரைந்து ஓடினாள். ஆரம்பத்தில் அவளுக்கு தன் எஜமானனை அடையாளம் தெரியவில்லை. அவனது சருமம் தெளிவாகவும், அவனது கண்கள் பளிச்சென்றும், அவனது முகத்தின் குறுக்கே ஓர் புன்னகையும் விரிந்திருந்தது. அவனது இரதம் வந்து நின்றபோது அவன் கீழே இறங்கி, அவள் அருகில் வந்து, குனிந்து நின்று பவ்வியமாக, "உனக்கு நன்றி" என்றான். மாலையில் குடும்பத்தோடு நாகமான் யெகோவா தேவனை நோக்கி ஜெபிக்க கூடி வரும்போது அவளையும் வரச் சொன்னான், மிகவும் நெருங்கிய அந்தக் கூட்டத்தில் அவள் அமர்ந்திருக்கையில் தானும் தனது ஜெபத்தை ஏறெடுத்தாள். திரும்பவும் அவள் ஓர் மகிழ்ச்சியான, தெய்வபயமிக்க குடும்பத்தின் அங்கமானாள்!*[21]

*ஒருவனை விசுவாசத்திற்கு கொண்டு வரும்படி தேவன் புறமதத்தானாகிய அவனது வாழ்வில் செயல்பட்டிருக்கிறர். உன்னையும் அவரிடம் கொண்டுவரும் முயற்சியாக உனது சொந்த வாழ்விலும் அவர் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். அவர் உனக்கு தேவை என்பதை நீ அறிந்துகொள்ளும்படி உனது இதயத்திலும் ஒருவேளை இந்தப்பாடத்தின் மூலம் அவர் கிரியை செய்திருப்பார். உனக்கு சரீர குஷ்டரோகம் இல்லாமலிருக்கலாம், ஆனால் கண்டிப்பாக "பாவம்" என்கிற ஆத்தும "புற்றுநோய்" உனக்கு இருக்கிறது (ரோமர் 3:23) - அது எவ்வித சரீர உபாதையையும் விட மிக மோசமானது (6:23). நாகமான் தனது தற்பெருமையை ஒதுக்கிவைத்துவிட்டு தேவன் கட்டளையிட்டதைச் செய்தான். நீயும் அதையே செய்யும்படி வேண்டுகிறேன் (மாற்கு 16:16; நடபடிகள் 2:38)!*

---

*குறிப்புகள்*

[1]*இந்த பாடத்திலுள்ள முக்கிய தலைப்புகள்* James E. Smith, *The Books of History,* Old Testament Survey Series (Joplin, Mo.: College Press Publishing Co., 1995), 563, 565 *லிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.* [2]Henry Blunt, *Lectures on the History of Elisha* (Philadelphia: Herman Hooker, 1839), 83; Adam Clarke, *The Holy Bible wih a Commentary and Critical Notes,* vol. 2, *Joshua-Esther* (New York: Abingdon-Cokesbury Press, n.d.), 495. [3]*நாகமான் யூத குஷ்டரோகிகளைப்போல தனிமைப்படுத்தி வைக்கப்படவில்லை என்பது இந்த முடிவுக்கு வருவதற்கான ஒரு விவாதமாக இருக்கிறது. யூதர்களுக்கு மோசேயின் பிரமாணத்தில் கொடுக்கப்பட்டிருந்த உடல்நலம் மற்றும் ஆரோக்கியத்திற்கான சட்டங்கள் சீரியர்கள் பெற்றிருக்கவில்லை என்பதை மனதில் வையுங்கள்.* [4]Merrill F. Unger, *The New Unger's Bible Dictionary,* ed. R. K. Harrison (Chicago: Moody Press, 1988), 357. [5]J. J. Reeve, "Elisha," *The International Standard Bible Encyclopedia*, ed. James Orr (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans

Publishing Co., 1939), 2:935. [6]Clyde M. Miller, *First and Second Kings,* The Living Word Commentary series, vol. 7 (Abilene, Tex.: A.C.U. Press, 1991), 332. [7]C. F. Keil and F. Delitzsch, "1 and 2 Kings," *Commentary on the Old Testament,* vol. 3, *1 and 2 Kings, 1 and 2 Chronicles, Ezra, Nehemiah, Esther* (Peabody, Mass.: Hendrickson Publishers, 1989), 317. [8]*பெரும்பாலான அமெரிக்க பார்வையாளர்கள் யூதர் மற்றும் அரபியருக்கிடையிலான இன்றைய நாளின் சிறுசிறு எல்லை போர்களை அறிந்திருக்கிறார்கள். உங்கள் பார்வையாளர்களுக்கு பொருத்தமான ஒரு ஒப்பீடு அல்லது ஒரு உதாரணத்தை பயன்படுத்துங்கள்.* [9]*இந்த தகவல் என்னுடைய* NIV *வேதாகம பதிப்பின் அடிக்குறிப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.* CJB*யில் "660 பவுன்டஸ் சில்வர்" என்றுள்ளது.* [10]Smith, 563. *நீங்கள் உங்கள் பகுதியில் விலையுயர்ந்த உலோகங்களை கையாளுகிறவர்களிடத்தில் விசாரித்து, அவைகளில் தற்கால மதிப்பை தெரிந்து கொள்ள விரும்புவீர்கள்.*

[11]*அமெரிக்க பார்வையாளர்கள் போர் நிறுத்த கொடியைப் பற்றி அறிந்திருக்கிறார்கள். நீங்கள் வாழும் பகுதியில் இந்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்படும் சமிக்கைகள் இருக்கலாம்.* [12]James A. Montgomery, "Kings," *International Critical Commentary* (Edinburgh: T. & T. Clark, 1951), 375; quoted in James Burton Coffman and Thelma B. Coffman, *Commentary on Second Kings*, James Burton Coffman Commentaries, The Historical Books, vol. 6 (Abilene, Tex.: A.C.U. Press, 1992), 68. [13]*நாகமான் தேவனுடைய பரிசுத்த நாமத்தை (*NASB *மொழிபெயர்ப்பில் "கர்த்தர்" என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.) இந்தக் கதை முழுவதும் பயன்படுத்தினார். இஸ்ரவேலரின் தேவனை குறித்த ஓரளவு அறிவு அவருக்கு இருந்திருக்கிறது. அவர் அதை அந்த இளம் அடிமைபெண்ணிடமிருந்து கற்றுக்கொண்டாரா?* [14]Donald J. Wiseman, *1 and 2 Kings: An Introduction and Commentary*, Tyndale Old Testament Commentaries (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1993), 207. [15]E. K. Vogel, "Jordan," in *The International Standard Bible Encyclopedia,* rev., ed. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1982), 2:1122. [16]Much of this phrasing was taken from F. W. Krummacher, *Elisha, a Prophet for Our Times* (Grand Rapids, Mich.: Kregel Publications, 1993), 152-53. [17]J. Robert Vannoy, notes on 2 Kings, *The NIV Study Bible*, ed. Kenneth Barker (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1985), 532. [18]*கிழக்கத்திய ராஜாக்கள் பொது இடங்களில் நகரும் போது தன் வேலைக்காரனின் கையை பிடித்துக்கொண்டு நடப்பது ஒரு பழக்கமாக இருந்தது. "கைலாகு கொடுத்து" என்பது "சாய்ந்து கொண்டு இருத்தல்" என்பதை சுட்டிக் காட்டுகிறது. ராஜாவுக்கு "யார் கைலாகு கொடுத்தாரோ" அவர் ராஜாவுடைய நம்பிக்கையை பெற்ற நம்பிக்கைக்குறிய ஒரு ஆலோசகராக இருந்தார் (ஒப்பிடுக 2 இராஜாக்கள் 7:2).* [19]Keil and Delitzsch, 321. [20]Miller, 336.

[21]*இந்த வர்ணனை* Elaine J. Fletcher, *Elisha, the Miracle Prophet* (Washington, DC: Review and Herald Publishing Association, 1960), 48; and Theodora Wilson, *Virtue's Bible Stories* (London: Virtue & Co., n.d.), 300 *லிருந்து எடுக்கப்பட்டது.*